# வாலாஜா வட்டம் அனந்தலையில் உள்ள
# கல்குவாரி இயக்குதல் மக்கள் கருத்துகேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

ராணிப்பேட்டை, செப்.23: வாலாஜா வட்டம் அனந்தலையில் உள்ள கல்குவாரி இயக்குதல் தொடர்பான கருத்துகேட்பு கூட்டம் ஒத்துவைக்கப்பட்டு வரும் அக்டோபர் மாதம் 21ம் தேதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கலெக்டர் பாஸ்கர பாண்டியன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், அனந்தலை கிராமத்தில் சர்வே எண்:1/4 பகுதி 31 முதல் பகுதி 40 வரை கல்குவாரி இயக்குவது தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் வரும் 25ம் தேதி சோளிங்கர் சாலை கீழ்புதுப்பேட்டை எம்.எஸ். கே.திருமண மண்டபத்தில் காலை 10.30 மணியளவில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் அறிக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் அன்றைய தினத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் வரும் அக்டோபர் மாதம் 21ம் தேதி மேற்குறிப்பிட்ட அதே இடத்தில் நடைபெறும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன், வேலூர் மாவட்டம்